1994 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42— டாக்டர் க. கோபால், மாண்புமிகு உணவு அமைச்சர்.

42—

நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டத்தில் சாலைகளைப் பராமரிக்க திட்டம்.

*21589— டாக்டர் க. கோபால்:

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டத்தில் சாலைகளைப் பராமரிக்க, அங்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வாங்கப்படும் ஒவ்வொரு நெல் மூட்டைக்கும் ஒரு ரூபாய் வீதம் வசூலிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே, அடுத்த கேள்வி எழவில்லை.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் மட்டும் 3 பருவத்திற்கும் சேர்த்து கிட்டத்தட்ட 11 இலட்சம் டன் நெல் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் வழியாக வாங்கப் பட்டு வருகிறது. அப்படி வாங்கப்படுகின்ற அந்த வேளையில், ஒவ்வொரு நேரடிக் கொள்முதல் நிலையத்திலும் பணியாற்றுகின்ற ஊழியர்கள் கிட்டத்தட்ட 2 ரூபாயிலிருந்து 3 ரூபாய் வரை அவர்கள் வசூலிக்கின்ற சூழ்நிலையை மாற்றும் எண்ணத்தோடு இந்தத் திட்டத்தினை இந்த நிதியாண்டில் இல்லாவிட்டாலும் வருகின்ற ஆண்டிலாவது பரிசீலனை செய்து அந்த மாவட்டத்தி னுடைய சாலைகளின் வளர்ச்சிக்கு வழிவகை செய்கின்ற வகையில் இந்தப் பிடித்தம் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1994 மார்ச் 19

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது கொள்முதல் செய்யப்படுகிற நெல்லுக்கு மூட்டைக்கு ஏதோ இரண்டு அல்லது மூன்று ரூபாயை கொள்முதல் செய்கிற அந்த அலுவலர்கள் பெறுகிறார்கள் என்ற ஒரு விவரத்தை இங்கே தெரிவித்தார்கள். அப்படிப் பெற வேண்டுமென்று அரசு ஆணை எதுவும் இடவில்லை. அப்படிப் பெறுகிற முறையும் சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்படவும் இல்லை. ஆனால் நடைமுறையில் அப்படி நடைபெறுவதாக ஆங்காங்கே தகவல்கள் தரப்படுகின்றன. ஆனால், நான் நேரிலே அந்த கொள்முதல் நிலையங்களுக்குச் சென்று விசாரணை செய்த போது அங்கே இருக்கிற விவசாயிகளே அப்படிக் கொடுப்பதில்லை என்றுதான் என்னிடத்தில் கூறினார்கள். ஆகவே, அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு அரசாங்கம் விவசாயிகளிடத்தில் இப்படிப்பட்ட ஒரு வசூலை நடத்துவதற்கு இயலாது. இப்படிப்பட்ட ஒரு கருத்து 1989-ஆம் ஆண்டு, அன்றைக்கு இணைந்திருந்த தஞ்சை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் ஐந்து ரூபாய் குவிண்டாலுக்கு வாங்கலாம் என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். ஆனால் அதை வாங்குவது என்றால் அதை விவசாயிகளிடத்திலிருந்து வாங்குவதா அல்லது நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடத்திலிருந்து வாங்குவதா என்கிற விவரங்கள் எல்லாம் இல்லை. எனவே தான் இது நடைமுறையில் இப்போது நடைமுறைப்படுத்த இயலாத ஒரு சிக்கலான பிரச்சினை என்று அரசு கருதுகிறது.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை—காயிதே மில்லத் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அந்த மாவட்டத்தின் சாலைகளை மேம்படுத்தும் பொருட்டு குறிப்பாக அந்த நெல் கொள்முதலை நேரடிக் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வருகிற சாலைகளையாவது சற்று சீர்செய்து தர வேண்டுமென்ற நோக்கத்தோடு கோரியுள்ளார்கள். அப்படி அந்த மாவட்டத்தில் வசதி செய்வதற்கு ஏற்றபடி அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மாவட்ட வளர்ச்சி மன்றமும் என்ன கருதுகிறது என்பதைத் தெளிவாக அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இப்படி வசூலிக்க வேண்டுமென்று எண்ணுகிற போது விவசாயிகளிடமிருந்து வசூலிக்க வேண்டுமென்று எண்ணுகிறார்களா அல்லது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷ்

ணிடத்திலிருந்து வசூலிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பதும் தெரியவில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இப்போது 400, 500 கோடி ரூபாய்க்கு மேல் அரசினுடைய நிதியுதவி பெற்று இந்த கொள்முதலை எல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறது; விநியோகித்துக் கொண்டு வருகிறது. ஆகவே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இதை ஏற்றுக் கொள்ள இயலாது. விவசாயிகளிடத்திலிருந்து பெற வேண்டுமென்று ஒருவேளை கருதினால் அதைப் பற்றிய விவரமான கருத்துக்களை மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மூலம் அரசுக்கு அனுப்புவார்களானால் அதைப் போன்ற நடைமுறைகள் வேறு துறைகளில் இருக்கிறதா என்பதை அரசு பரிசீலிக்கும். உதாரணமாக இப்போது கரும்பு செஸ் என்று வசூலிக்கிறார்கள். அந்த விவரங்கள் என்னிடத்தில் முழுமையாக இல்லை. வசூலிக்கிறார்கள் என்பது இருக்கிறதே தவிர, விவசாயிகளிடத்திலிருந்து வசூலிக்கப்படுகிறதா, இல்லையா என்ற விவரமும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து எந்த அடிப்படையில் இருக்கிறது என்பதைத் தெளிவாக அரசுக்குத் தெரிவிப்பார்களானால் அதை நடைமுறைப்படுத்த இயலுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் கேட்ட கேள்வியின் அடிப்படையில் ஒரு மூட்டைக்கு ஒரு ரூபாய் வீதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா கேட்டிருப்பவர் டாக்டர் கோபால். உறுப்பினர் பெயரை மாற்றி விடக் கூடாது. (சிரிப்பு)

திரு. ஆர். சிங்காரம்: தலைவர் அவர்களே, கோபால் அவர்கள் எழுப்பிய கேள்வியின் அடிப்படையில் ஒரு ரூபாய் வசூலிப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சட்டமன்றத்தில் இல்லையென்றுதான் அறிவிக்க வேண்டும். மேலும் அவர் சொன்னது உண்மை. ஒரு ரூபாய் மட்டுமல்ல ஒரு ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய்வரை வசூலிக்கிறார்கள். அதே நேரத்தில் இது இயற்கை. எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி அல்லது எதிரிக்கட்சி என்று வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் தெரியும். ஆகவே இதை நீங்கள் தயவுசெய்து ஒரு அரசாணை மூலம் ஸ்பெசிபிக்காக எந்தவிதக் காசும், பணமும் வாங்கக் கூடாது என்று உத்தரவிட வேண்டும். அதுமட்டுமல்லாமல் விவசாயிகள் நெல் கொண்டு வருகிறபோது கடந்த புயல் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டு நெல்

எல்லாம் கலர் நெல்லாகவும் இருக்கிறது. உள்ளே அரிசி நன்றாக இருக்கிறது. சில இடங்களில் வேறு மாதிரி இருக்கிறது. தரத்திற்குத் தக்கவாறு நெல் கொள்முதல் செய்துவிடலாம். ஆனால் சில இடங்களிலே அதைத் திருப்பி விட்டுவிடுகிறார்கள். ஆகவே, விவசாயிகள் மிகவும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். இந்தநிலை தஞ்சைமாவட்டம் மட்டுமல்லாமல் தமிழகம் பூராவும் இருக்கிறது. ஆகவே இதுகுறித்து விசேஷ கவனம் செலுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்பெசிபிக் உத்தரவிட்டு எந்த ரூபாயும் வாங்கக்கூடாது என்றும், அதே நேரத்தில் எப்படி நெல் இருந்தாலும், அதைத் தரத்திற்கு ஏற்றவாறு கொள்முதல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இதை அரசு உடனடியாகக் கவனிக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

<u>மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் மூலக் கேள்விக்குத் தொடர்பான ஒரு கேள்விப் பகுதியையும் இங்கே கேட்டு இருக்கிறார்கள். அதற்குத் தொடர்பு இல்லாத நெல் கொள்முதல் தொடர்பான இன்னொரு கேள்வியையும் இங்கே கேட்டிருக்கிறார்கள். நான் முதலிலே இதற்குத் தொடர்புள்ள அந்தப் பகுதிக்கு பதில் அளித்து விடுகிறேன். நான் முன்னாலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்கள் தெரிவித்ததற்கு விளக்கம் அளித்தேன் இப்படி வாங்குவதாக பொதுவாக தகவல் சொல்கிறார்கள். ஆனால் நேரிலேயே நானே அந்த இடங்களுக்கு எல்லாம் சென்று விவசாயிகளிடத்திலே கேட்டபோது விவசாயிகள் இல்லை என்று தான் என்னிடத்திலே மறுத்திருக்கிறார்கள். ஒரு ஆணையின் மூலமாக வாங்கக் கூடாது என்று அரசு உத்தரவிட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நாங்கள் வாங்கவே கூடாது என்று ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றபோது அவர்கள் முறையற்ற முறையில் வாங்குகிறார்கள் என்பதை அரசு ஏற்றுக் கொண்டு நீ வாங்காதே என்று சொல்வது இயலாது. அது சட்டப்படி நடைபெறாது. நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலமாக மற்றவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படி எங்கேயாவது அலுவலர்கள் கேட்கிறார்கள் என்றால் யாரும் கொடுக்க வேண்டாம். அப்படிக் கொடுக்காத காரணத்தால், ஏதாவது இடையூறுகள் ஏற்படுகின்றன என்றால் அவர்கள் அரசுக்கு உடனடியாகத் தெரிவிக்கட்டும். அந்த இடையூறுகளை அகற்றுகிறோம். சட்ட விரோதமான ஒரு காரியத்திற்கு சட்டப்படி அரசாங்கம் ஒரு ஆணையைப் பிறப்பிக்க இயலாது. இதிலே நான் இன்னொரு கசப்பான உண்மையைச் சொல்கிறேன்.

1994 மார்ச் 19]

எல்லோருக்கும் தெரியும் என்று மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். அப்படி வாங்கப்படுமே யானால் வாங்குகிற பணம் எப்படிப் பிரிக்கப்படுகிறது என்றும் பொதுவாக பேசிக் கொள்கிறார்கள். அதிலேயும் எல்லோருக்கும் தொடர்பு இருக்கிறது என்றெல்லாம் கூடச் சொல்கிறார்கள். அப்படிச் சொல்லப்படுகிற செய்திகளுக்கு எல்லாம் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது. மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் இதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டு, இன்ன இடத்தில் இந்த அலுவலர், இவ்வளவு வாங்கினார் என்று முறையாக எழுத்து மூலமாக உறுதியாக சாட்சியத்தோடு தெரிவித்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இரண்டாவது பகுதி கேள்விக்கு, தனியாக அவர்கள் கேள்வி போட்டால், நான் விரிவான விளக்கத்தைத் தெரிவிக்க முடியும். ஆனால் பொதுவாக ஒன்றை மாத்திரம் சொல்கிறேன். மூன்றாவது கிரேட் என்று இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு, இன்றைக்கு மழையாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட தஞ்சை மாவட்டத்தில், விவசாயிகளிடமிருந்து வாங்கலாம் என்று ஒரு புதிய ஆணையை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அனுமதியோடு நம்முடைய உணவுத் துறை பிறப்பித்து இருக்கிறது. அப்படிப்பட்ட நெல்லையும் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மாத்திரம் நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். ஆசைமணி.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் விவசாயிகள் அங்கே நெல் கொள்முதல் நிலையத்தில் கொண்டு வந்து கொடுக்கிற நெல்லிற்கு, விவசாயிகளிடமிருந்து மூட்டைக்கு ஒரு ரூபாய் பிடித்துக் கொள்ளலாம் என்று ஒரு தீர்மானத்தை நாங்கள் போட்டிருக்கிறோம். அதேபோல், மாதந்தோறும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அலுவலகத்தில் நடைபெறுகிற விவசாயிகள் குறை தீர்க்கும் நாளிலே அங்கே வருகை தந்திருந்த விவசாயிகள், தங்களுடைய நெல்லில் மூட்டைக்கு ஒரு ரூபாய் பிடித்துக் கொள்வதற்கு சம்மதம் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, இந்த இரண்டையும் வைத்து, அங்கே விவசாயிகள் கொண்டு வந்து நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு அளிக்கின்ற நெல்லில் மூட்டைக்கு ஒரு ரூபாய் வீதம் பிடித்து, மிகவும் மோசமாக உள்ள அந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்கு நிதி உதவி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1994 மார்ச் 19

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே இப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாக, இதுவரை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை, அப்படி நிறைவேற்றப்பட்டிருக்குமானால், அது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்படுமானால் அதை அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். ஏனெனில், இப்போது கரும்பு கொள்முதல் செய்கிற போது, கரும்பு விவசாயிகள் ஆலைகளுக்குக் கொண்டு வந்து விற்கிறபோது, ஒரு டன் ஒன்றுக்கு 5 ரூபாய் செஸ் என்று விவசாயிகளிடத்திலிருந்து வாங்கி, அதைக் கரும்பு ஆலைகள் அரசாங்கத்திற்குச் செலுத்திக் கொண்டிருக்கின்றன. அப்படி வருகிற அந்தப் பணத்திலேயிருந்து, போக்குவரத்தினாலே, அந்தப் பகுதிச் சாலைகள் பழுதடைந்து விடுகின்றன என்ற அடிப்படையில் அந்தச் சாலைகளைச் சீர்ப்படுத்துவதற்காக அந்த நிதி செலவழிக்கப்படுகிறது. அதைப் போல, நம்முடைய நாகை-காயிதே மில்லத் மற்றும் தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் இப்படி அதிகமாக லாரிகள் போக்குவரத்து ஏற்படுகிறது என்ற காரணத்தினாலும், இயற்கையாக ரோடுகள் பழுதடைந்தாலும் அதனாலும் அதிக பழுது அடைவதற்குக் காரணமாக இருக்கிற அந்தச் சூழ்நிலையையொட்டி, விவசாயிகள் மனமுவந்து ஒரு ரூபாய் கொடுக்க முன்வருவார்களானால், அதைப் பெற்று, அந்தச் சாலைகளை எல்லாம் சீர்திருத்தவும், மேம்படுத்தவும், நடவடிக்கை எடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 43, டாக்டர் மு. காளிராஜன், இருக்கையில் இல்லை; அவருக்குப் பதிலாக டாக்டர் ஜெ. பரந்தாமன் கேட்கிறார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

43—

மருத்துவத் துறையில் பட்ட மேற்படிப்பு மட்டும் கொண்டுவரும் திட்டம்.

*10386—டாக்டர் மு. காளிராஜன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவத் துறையில் பட்டப் படிப்பை நீக்கி விட்டு பட்ட மேற்படிப்பு மட்டும் கொண்டு வரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?